MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# அற இலக்கிய பொருட்புலப்பாட்டில் பெயர்ச்சொற்களின் பயன்பாடு

**முனைவர் பெ.ஆனந்தி,**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,**
**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி.**

DOI 10.5281/zenodo.17070951.

**Abstract :**

Words are classified on the basis of grammar and nature. On the basis of grammar, words are divided into four categories. They are nouns, verbs, interjections, and adjectives. Words are classified into four categories based on their nature and place of origin, namely, adverbs, adverbs, participles, and adverbs. The most important of the categories of words is the noun.The Tamil dictionary gives the meaning of name as “Keerthi, Naamam, Peerenneval, Noun, Idukuriyayum Kaakkariyayum Different forms that explain the name of something in relation to the subject”1. Therefore, nouns can be said to be the most important among the categories of words and the most essential for sentences.

**Key Words : Grammar - Ethics Literature - Tholkappiyam - Noun - Object**

எழுத்துக்களின் கூட்டுவடிவம் பொருள் தருமாயின் அது சொல் எனப்படுகிறது . ஓர் எழுத்து தனித்து நின்றோ பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் உணர்த்தி நிற்கும் எனில் அது சொல் என அறிஞர்களால் வரையறை செய்யப்படுகிறது.

**“எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”** **(தொல்.சொல். நூற்.157)**

என்று தொல்காப்பியர் சுட்டியுள்ளார் . இந்நூற்பாவின் வழி, ‘பொருள் தந்தால் தான் அது சொல்’ என்ற விதி விளக்கப்படுகிறது . எழுத்துகளின் சேர்க்கை சொல்லாகாது , அது பொருள் தந்தால் மட்டுமே சொல்லாகிறது. எனவே சொற்கள் அனைத்துமே பொருள் கொண்டவையாதல் வேண்டும். சொற்களின் பயன்பாடு ஓர் இலக்கியத்திற்கு மிக இன்றியமையாததாகும் . சொற்களைத் தேர்ந்தெடுத்தலும் அதை ஏற்ற இடத்தில் அமைத்தலும் ஒரு நல்ல படைப்பாளனின் திறமைக்கு சான்றாகிறது. இவ்வகையில் பொருட்புலப்பாட்டிற்கு சொல்லியல் சார்ந்த அமைப்பு முறைகளும் பயன்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு அற நூல்களில் பொருட்புலப்பாட்டிற்கு பெயர்ச் சொற்கள் பயன்பட்ட திறத்தை இக்கட்டுரை விளக்குகிறது.

## பெயர்ச் சொற்களின் பயன்பாடு :

சொற்கள் இலக்கண அடிப்படையிலும், இயல்பு அடிப்படையிலும் வகைப்படுத்தப் படுகின்றன. இலக்கண அடிப்படையில் சொற்கள் நான்கு வகைப்படும் . அவை, பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என்பவையாகும். சொற்களை அதன் இயல்பு நோக்கியும், பயின்று வரும் இடத்தை நோக்கியும் , இயற் சொல் , திரி சொல் , திசைச் சொல் , வட சொல் என நான்காகவும் வகைப்படுத்துவர். சொல்லின் வகைமைகளுள் முதன்மையானது பெயர்ச் சொல்லாகும்.



http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

தமிழ் மொழி அகராதி பெயர் என்பதற்கு "கீர்த்தி, நாமம், பெயரென்னேவல், பெயர்ச்சொல், இடுகுறியாயுங் காரணக் குறியாயும் வேற்றுமை உருபுகள் சார்தற்கிடனாய் ஒன்றன் பெயரை விளக்கி நிற்குஞ்சொல்"[1]எனப் பொருள் தருகிறது.

எனவே சொற்களின் வகைகளுள் முதன்மையானதாகவும் வாக்கியங்களுக்கு மிக இன்றியமையாததாகவும் அமைவது பெயர்ச்சொற்களே எனலாம். அற இலக்கிய ஆசிரியர்கள் பெயர்ச் சொற்களை மிகுதியான அளவில் பயன்படுத்திப் பாடலமைத்துப் பொருட் புலப்பாடு செய்துள்ளனர் . அற இலக்கியங்களில்

- உயர்திணைப் பெயர்கள்
- அஃறிணைப் பெயர்கள்
- பொருட் பெயர்கள்
- இடப் பெயர்கள்
- காலப் பெயர்கள்
- சினைப் பெயர்கள்
- குணப் பெயர்கள்
- தொழிற் பெயர்கள்

எனப் பலவகைப் பெயர்ச் சொற்கள் பயின்று வந்து கேட்போரின் மனதில் ஒருவித இயல்பு உணர்வை ஏற்படுத்துகின்றன. தனக்கு ஏற்கனவே அறிமுகமான பெயர்களைச் சுட்டிக் காட்டும் போது அப்பெயர் மீதான ஈடுபாடு மிகுதியாகி கருத்தினை முழுமையாகக் கேட்க வாய்ப்பாக அமையும் . இதைக் கருத்தில் கொண்டே அற இலக்கியங்களில் பொருட் புலப்பாட்டிற்குப் பெயர்ச்சொற்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன எனக் கருத இடமுள்ளது.

**உயர்திணைப் பெயர்கள் :**

அற இலக்கியங்களில் மக்களை நோக்கி விளித்து , பின்னர் கருத்துரைப்பது போன்ற பாடல்களே மிகுதியாக உள்ளன. எனவே மிகுதியான உயர்திணைப் பெயர்கள் வரப்பெற்றுள்ளன.

- தெய்வம்
- மன்னர்
- சான்றோர்

எனும் அடிப்படையில் அறஇலக்கியங்களில் அமைந்துள்ள உயர்திணைப்பெயர்களை ஆராய இயலுகின்றது.

**தெய்வப் பெயர்கள் :**


http://Creativecommons.org//license/by/4.0/.

உயர்திணைப் பெயர்களுள் உயர்ந்ததாகக் கருதப்படுபவை தெய்வப் பெயர்களாகும் . தெய்வம் பற்றிய குறிப்புகள் அற இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன . திருக்குறளில் ‘தெய்வம’; எனும் சொல் ஆறு இடங்களில் வரப்பெறுகிறது. (குறள் எண் 619, 1023, 50, 202, 43, 55)

**“தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்” (குறள்.619)**

எனும் குறள் அக்கால மக்களின் தெய்வ நம்பிக்கையை நிலைப்பாடாகக் கொண்டு அமைந்துள்ளது. நாலடியாரிலும் தெய்வத்தைச் சுட்டும் பெயர்கள் வரப்பெறுகின்றன.

அமரர் (நாலடி 373) அயிராணி (நாலடி 381) சிவன் (நாலடி 400) தெய்வம் (நாலடி 304) இந்திரன் (நாலடி 346) ஆகிய பெயர்களும் நாலடியாரில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

மக்களிடையே கரு த்தைப் புலப்படுத்தும் நிலையில் தெய்வப் பெயரைச் சுட்டிக் குறிப்பிடும் முறைமையும் இருந்துள்ளமையை இதன் வழி அறியலாகிறது.

**மன்னர் பெயர்கள் :**

மக்களின் தலைவன் மன்னன் ஆவான் . மன்னரைக் குறிக்கும் பெயர்களாகத் திருக்குறளில் , அரசு, மன்னன், வேந்தன், இறை, மன்னவன் என்பன போன்ற பெயர்கள் வரப்பெறுகின்றன. சான்றாக,

**“குடிதழீஇ கோலோச்சும் மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு” (குறள்.544)**

எனும் குறளைச் சுட்டலாம். குடிமக்களுக்கு வேண்டியவற்றைச் செய்து கொடுத்து வாழ வேண்டிய மன்னனின் அறம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்,

**“மறை அறிப அந்தண்புலவர் முறையொரு**
**வென்றி அறிப அரசர்கள் என்றும்**
**வணங்கல் அணிகலம் சான்றோர்க்கு அஃதன்றி**
**அணங்கல் வணங்கின்று பெண்” (நான். பா.88)**

என்ற பாடலிலும் ‘அரசர்’ எனும் பெயர்ச்சொல் கையாளப்பட்டுள்ளது. இது தவிர இப்பாடலிலேயே ‘சான்றோர்’, ‘புலவர்’, ‘பெண்’ ஆகிய பெயர்களும் வரப் பெற்றுள்ளன.

**“வார்சான்ற கூந்தல் வரம்புஉயர வைகலும்**
**நீர்சான்று உயரவே நெல்உயரும் சீர்சான்ற**
**தாவாக்குடி உயரத் தாங்கு அருஞ் சீர்க்கோ உயர்தல்**
**ஓவாது உரைக்கும் உலகு” (சிறு.ப.மூ. பா.44)**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

என்ற சிறுபஞ்ச மூலப் பாடலில் மன்னர் எனும் பெயர் 'கோ' எனச் சுட்டப்பட்டு உள்ளது . இவ்வாறாக 'அரசர், மன்னன், கோ' என்ற பொதுப் பெயர் மட்டுமின்றி

**"வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்**
**தூங்கும் எயிலும் தொலைத்தலால் ஆங்கு**
**முடியும் திறத்தால் முயல்க தாம் கூரம்**
**படியிழுப்பின் இல்லை அரண்"** **(பழ.நா.பா.156)**

என்ற வகையில் தொடிதோட் செம்பியன் கரிகாலன் போன்ற மன்ன ர்களின் தனிப்பட்ட பெயர்களும் சுட்டப்பட்டுள்ளன. அற இலக்கிய காலக் கட்டத்தில் மன்னர்களின் செல்வ செழிப்பையும் , வளத்தையும் உள்ளுணரச் செய்தும் பல அறங்கள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன . மேலும், மன்னர்களுக்கும் அறங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதையும் அறியலாகிறது.

**சான்றோர் பெயர்கள் :**

அறக் கருத்துகளைக் கேட்டறிந்து வாழ்வில் அதைக் கடைபிடித்து ஒழுகுபவர்கள் சான்றோர்கள் ஆகின்றனர். அத்தகைய அறிவுடையோரைக் குறிக்கும் பெயர்களும் அற இலக்கியங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

குணத்திலும் வாழ்வியல் நெறிகளிலும் உயர்ந்தோரைக் குறி க்கும் பெயர்களாக அற இலக்கியங்களில் பெரியார் , தலையாயர், மிகை மக்களான் , உயர்ந்தவர், அறிவாளர், மேன்மக்கள், சீரியார் என்ற பல பெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**"நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்**
**பயன்இல சொல்லாமை நன்று"** **((குறள்.197)**

என்ற குறளிலும்,

**"செயற்கு அரிய செய்வார் பெரியர் சிறியர்**
**செயற்கு அரிய செய்கலா தார்"** **(குறள்.26)**

என்ற குறளிலும் , 'சான்றோர்' ' பெரியர்' என்ற பெயர்கள் எடுத்தாளப்பட்டுள்ளன . திருக்குறளில் அதிகளவில் மேன்மக்கள் மாண்பு சுட்டப்படுகிறது . அறநெறிகளைத் தவறாது கடைபிடிப்பவர்கள் சான்றோர்களாக அடையாளம் காட்டப்படுகின்றனர்.

**"குடிப்பிறப்பாளர் தம் கொள்கையின் குன்றார்"** **(நாலடி. பா.141:2)**

என்ற அடியிலும்,

**"குடிப்பிறந்தார் குன்றா ஒழுக்கமாகக் கொண்டார்"** **(நாலடி. பா.143)**


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

என்ற அடியிலும், நாலடியாரில் "குடிப்பிறந்தார்" என்ற பெயர் சான்றோர்க்குச் சுட்டப்பட்டுள்ளது. நல்ல குடியில் பிறந்தவர்கள் அல்லது தமது குடிக்கு நற்பெயர் எடுத்துத் தருபவர்கள் என்ற அடிப்படையில் மேன்மக்களுக்கு இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

திருக்குறளில் பல குறட்பாக்கள் ஆன்றோரை முன்னிறுத்திக் கூறியவையாகவோ அல்லது ஆன்றோர் இயல்பு கூறியதாகவோ அமைக்கப் பெற்றுள்ளது. திருக்குறளில் 'சான்றோர்' என்ற பெயர் பதினைந்திற்கும் மேற்பட்ட குறட்பாக்களில் கையாளப் பட்டுள்ளது. சான்றாக,

**"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு"** **(குறள்.299)**

என்ற குறளைச் சுட்டலாம். "உலகத்து உயர்ந்த சான்றோரை முன்னிட்டு அறப் பொருளைக் காட்டும் மரபும் குறளகத்துப் பலவாக உள்ளமை தெரிய வரும்"[2] என்பர். திருக்குறளில் சான்றோர் என்ற பொருளை உணர்த்தும் பெயர்களாக 'கடனறி காட்சியவர்' (218) மாசறு காட்சியவர் (199, 352) அறிவினார் (798) நாகரிகம் வேண்டுபவர் (580) என்பன போன்ற சான்றாண்மையைக் குறிப்பிடும் பெயர்களும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

**கீழ்மக்கள் பெயர்கள் :**

தம் குணத்தாலும் செய்யும் செயலாலும் கீழானவற்றை நிகழ்த்துபவர்கள் கீழ்மக்கள் என வழங்கப்படுகின்றனர்.

**"தேவர் அனையர் கயவர் அவருந்தாம்**
**மேவன செய்தொழு கலான்"** **(குறள்.1073)**

எனும் திருக்குறளிலும்

**"கயவரைக் கை இகந்து வாழ்தல் இனிதே"** **(இனியவை. பா.29:1)**

என்ற இனியவை நாற்பது பாடலடியிலும்

**"கல் எறிந்தன்ன கயவர் வாய் இன்னாச்சொல்"** **(நாலடி. பா.66:1)**

என்ற நாலடியார் பாடலடியிலும் 'கயவர்' எனும்; பெயர் வரப்பெற்றுள்ளது. கீழ்த்தரமான செயல்களைச் செய்யும் மக்களைக் கீழ்மக்கள் (நாலடி. 70, 349, 368) சிறியார், பேதையார், பிறந்தும் பிறவாதார், ஒழுக்கம் இலாளர், என்பன போன்ற கீழ்மையைக் குறிப்பிடும் பெயர்களால் அற இலக்கியங்களில் சுட்டியுள்ளனர்.

இகழ்ச்சியான பெயர்களைச் சுட்டி பேசும் போது அக்கருத்தை மனதில் ஆழப் பதியச் செய்ய முடிகிறது. அதாவது மனிதர்கள் இத்தவறைச் செய்தால் யாராக இருந்தாலும் இவ்வுலகம் அவர்களையும் இப்பெயர்களால் தான் அழைக்கும் என்ற ஒருவித பண்பாட்டு பய உணர்வினை


http://Creativecommons.org//license/by/4.0/.

மனதினுள் ஏற்படுத்தும் முறையிலேயே ஆசிரியர்கள் தம் பாடல்களில் கீழ் மக்களின் பெயர்களைச் சுட்டியுள்ளனர் எனலாம்.

**அஃறிணைப் பெயர்கள்** :

மக்கள், தேவர், நரகர் ஆகிய உயிர் உள்ளவர்களைத் தவிர பிற உயிர்களும் உயிரற்ற பொருட்களுமே அஃறிணைகளாக இலக்கண நூல்கள் சுட்டுகின்றன.

**“மக்கள் தேவர் நரகர் உயர்திணை**
**மற்று உயிர் உள்ளனவும் இல்லவும் அஃறிணை”** **(நன்.நூற்.4)**

என நன்னூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே,

- தாவரங்கள்
- விலங்குகள்
- பறவைகள்

போன்ற பிற உயிருள்ளவை அஃறிணைகளாகக் கொள்ளப் படுகின்றன.

மக்களின் வாழ்வியலோடு அழகியலும் சேரும் போது நல்ல இலக்கியப் படைப்பு உருவாகிறது . அவ்வகையில் அற இலக்கியங்களில் ; தாவரங்களின் பெயர்கள் , விலங்குகளின் பெயர்கள் , பறவைகளின் பெயர்கள் வாழ்வியல் நெறிக்காக பயன்படுத்தப் பட்டுள்ளன.

**“மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின்”** **(குறள்.217)**

எனும் திருக்குறளில் மரத்தினை உவமையாக்கி , நற்பண்புடையவனின் செல்வம் தரும் பயனை வள்ளுவர் விளக்குகிறார்.

**“யானை குதிரைபொன் கன்னியே ஆனிரையோடு**
**ஏனை ஒழிந்த இவை எல்லாம் ஆன் நெய்யால்**
**எண்ணன் ஆய் மாதவர்க்கு ஊண் ஈந்தான் வைசிர**
**வண்ணன் ஆய் வாழ்வான் வகுத்து”** **(ஏலாதி பா.49)**

எனும் பாடலில் யானை , குதிரை, பசுக்கூட்டம் ஆகிய விலங்குப் பெயர்கள் இடம் பெற்றுள்ளன . இவ்விலங்குகளை ஈகைப் பொருளாய் கொடுத்தவன் குபேரனாய் வாழ்வான் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

**“கலாஅல் கிளி கடியும் கானக நாட**
**இலாஅஅர்க்கு இல்லை தமர்”** **(நாலடி. பா.283)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்ற பாடலடிகளில் 'கிளி' எனும் பறவைப் பெயர் பயின்று வந்துள்ளது . கிளிகள் இருக்கின்ற காட்டிற்குத் தலைவனே! என விளித்தற்பொருட்டு இப்பறவையின் பெயர் சுட்டப் பட்டுள்ளது.

இவ்வாறாக அறக்கருத்துகளைக் கூற விளையும் போது கேட்போருக்கு மிக நெருக்கமான , கேட்போருக்கு மிகவும் பழக்கப்பட்ட , அஃறிணைப் பெயர்களாக விலங்குகள் , தாவரங்கள், பறவைகள் என்பன போன்றவற்றைக் குறிப்பிடும் போது அவர்தம் கேட்கும் திறம் கூர்மையாக்கப் படுவதற்கான ஓர் உத்தியாகவும் ஆசிரியர்கள் இதனைப் படைத்துக்காட்டியுள்ளனர் எனலாம்.

**பொருட் பெயர்கள் :**

அற இலக்கியங்களில் ஒரு பொருளைக் குறிக்கும் பொருட்பெயர்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**"பறைநன்று பண்அமையா யாழின் நிறைநின்ற**
**பெண்நன்று, பீடுஇலா மாந்தரின், பண்அழிந்து"** **(நான். பா.13)**

என்ற பாடலடிகளில் யாழ், பறை போன்ற இசைக் கருவிகளின் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன.

**"துடைப்பம் துகுட்காடு, புல்இதழ், செத்தல்**
**கடுங்கலம் கட்டில் கிழிந்தனோடு ஐந்தும்**
**பரப்பற்க பந்த ரகத்து"** **(ஆசார. பா.45)**

எனும் ஆசாரக்கோவை பாடலில் பந்தலின்கீழ் வைக்கக் கூடாத பொருட்கள் பட்டியலிடப் படுகின்றன. எனவே அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் பொருட்களின் பெயர்களும் பாடல்களில் இடம்பெற்றுள்ளமையை அறியமுடிகிறது.

**இடப் பெயர்கள் :**

இடத்தைக் குறிக்கும் பெயர் இடப்பெயராகும் . வீடு, காடு, மலை, கடல், பதி, மன்றம் என்பன போன்ற பல இடப்பெயர்கள் அற இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

**"அதர் சென்று வாழாமை ஆற்ற இனிதே**
**குதர் சென்று கொள்ளாத கூர்மை இனிதே"** **(இனியவை. பா.11)**

பல ஊர்களில் இரந்து வாழாதிருத்தல் இ னிமையைத் தரும் என்ற பொருளை உணர்த்தும் இப்பாடலடிகளில் வாழ்வியலோடு தொடர்பு கொண்ட இடப்பெயர் வரப்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. இன்றளவும் அவரவர் வாழும் இடத்தின் மீது அவரவருக்குப் பற்று மிகுதியாக இருந்து வருவதும் எண்ணத்தக்கது . அந்த அடிப்படையிலேயே ஆசிரியர்கள் இடப் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளனர் எனலாம்.

**காலப் பெயர்கள் :**


http://Creativecommons.org//license/by/4.0/.

காலத்தைச் சுட்டும் காலப்பெயர்களும் அற இலக்கியங்களில் வரப்பெற்றுள்ளன . காலமறிதலின் முதன்மை திருக்குறள் , நாலடியார் போன்ற அற இலக்கியங்களில் மிகுதியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**“எல்லிப் பொழுது வழங்காமை முன் இனிதே”** **(இனியவை. பா.34)**

என்ற அடியிலும்,

**“பகல்வெல்லும் கூகையைக் காக்கை”** **(குறள்.481)**

என்ற அடியிலும்,

**“மாரிநாள் கூவும் குயிலின் குரல் இன்னா”** **(இன்னா. பா.20)**

என்ற அடியிலும், இரவு, பகல், மழைக்காலம் என்ற காலப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இவையன்றி குளிர் காலத்தைக் குறிக்கும் கூதிர் , மாதத்தைக் குறிக்கும் திங்கள் என்ற காலப் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**சினைப் பெயர்கள் :**

உறுப்புகளைச் சுட்டும் பெயர் சினைப் பெயர் . மனித உடலின் உறுப்புகளையோ தாவர , விலங்கு, பறவைகளின் உறுப்புகளையோ சுட்டும் பெயர்கள் சினைப் பெயர்களாகின்றன.

**“மயிர் வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்**
**உகிர் வனப்பும் காதின் வனப்பும் செயில் தீர்ந்த**
**பல்லின் வனபப்பும் வனப்பு அல்ல நூற்கு இயைந்த**
**சொல்லின் வனப்பே வனப்பு”** **(சிறு.ப.மூ. பா.35)**

என்ற பாடலில் மயிர் , மார்பு, நகம், காது, பற்கள் எனப் பல உறுப்புப் பெயர்கள் சுட்டப்பட்டு இவற்றின் அழகை விட அறிவால் வரும் அழகே உண்மையான அழகு என்ற அறம் விளக்ககப்பட்டுள்ளது.

**குணப் பெயர்கள் :**

ஒரு நபரின் பண்பையோ அல்லது ஒரு பொருளின் பண்பையோ சுட்டும் பெயர் குணப் பெயராகிறது. மக்களின் குணத்தை மேம்படுத்துவதையே முழு முதற் நோக்கமாகக் கொண்டு படைக்கப்பட்ட அற இலக்கியங்களில் குணப் பெயர்களும் பயின்று வந்துள்ளன.

**“ஈத்து உண்பான் என்பான் இசை நடுவான் மற்று அவன்**
**கைத்து உண்பான் காங்கி எனப்படுவான் தெற்ற**
**நகை ஆகும் நண்ணார் முன் சேறல் பகை ஆகும்**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

**பாடு அறியா தானை இரவு"** **(நான். பா.59)**

என்ற நான்மணிக்கடிகைப் பாடலில் பிறருக்குக் கொடுத்து உண்பவன் , பேராசை மிக்கவன் என்ற கருத்தை விளக்கும் இடத்தில் குணத்தைச் சுட்டும் பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**தொழிற் பெயர்கள் :**

தொழிலைக் குறிக்கும் பெயர் தொழிற்பெயர் ஆகும் . இலக்கியங்களில் அவ்வவ் கால தொழில்களும், தொழிற்பெயர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**"கள்ளார் கள் உண்ணார் கடிவ கடிந்து ஒரீஇ**
**எள்ளிப் பிறரை இகழ்ந்து உரையார் தள்ளியும்**
**வாயின் பொய் கூறார் வடுஅறு காட்சியார்**
**சாயின் பரிவது இலர்"** **(நாலடி. பா.157)**

எனும் பாடலில் திருடல் , கள் உண்ணல் , இகழ்ந்து பேசுதல் , பொய் கூறல், வறுமையால் வருந்துதல் போன்ற தொழில்கள் சுட்டப்பட்டு உள்ளன . இந்த இழிந்த செயல்களை மேன்மக்கள் செய்ய மாட்டார்கள் என்ற பொருள் இதன்வழி பெறப்படுகிறது.

**தொகுப்புரை**

அற இலக்கியங்களில் பெயர்ச் சொற்கள் மிகுதியான இடங்களில் பயின்று வந்து கருத்தினை எளிமையாகப் புலப்படுத்திட துணைபுரிவதனை அறியலாகின்றது . பெயர்ச் சொற்களின் பயன்பாடு அதிகப்படுத்தப்பட்டமையால் மக்கள் இயல்பாக கருத்து கேட்கும் மனநிலையைப் பெறுவர் . பழக்கமான பெயர்களைச் சுட்டி கருத்தை விளக்கும் போது அங்கு கருத்தின்மீதான தெளிவு கிடைக்கும். எனவே அற இலக்கிய புலவ ர்கள் தம் பொருட்புலப்பாட்டில் பெயர்ச் சொற்களைப் பயன்படுத்தும் திறத்தைக் கையாண்டுள்ளனர்.

**சான்றெண் விளக்கம்**

1. நா.கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப.1084
2. மு.சண்முகம் பிள்ளை, திருக்குறள் அமைப்பும் முறையும், ப.226


http://Creativecommons.org//license/by/4.0/.